# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.14/2025

## PW: 2

| Name : | திரு. கபிலன் | Taluk : | நாகப்பட்டினம் |
|---|---|---|---|
| Father's Name : | திரு.கோவிந்தராஜ் | Calling : | LW2 |
| Village : | சகடைமங்கலம் | Age : | 41 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 22nd day of June 2026.

Signature of Witness.

(Accused present. Assistant Public Prosecutor Grade II Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தற்போது தமிழ்நாடு போக்குவரத்து கழகம் நன்னிலம் கிளையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.10.2024 அன்று தமிழ்நாடு போக்குவரத்து கழகம் திருவாரூர் கிளையில் TN68 N 0869 ஓட்டுநராக பணியில் இருந்தபோது திருவாரூரிலிருந்து கும்பகோணம் நோக்கி மதியம் 1.10 மணியளவில் வந்து கொண்டிருந்தபோது கும்பகோணம் நீலமேகம் மேம்பாலத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பேருந்தை ஓட்டி வந்துக் கொண்டிருந்தபோது என் பேருந்திற்கு பின்னால் இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர் எங்கள் பேருந்திற்கு வலது பக்கமாக முந்தி செல்லும்போது எதிர் திசையில் வந்த டவேரா TN22 CS 6608 காரை ஓட்டி வந்த

ஓட்டுநர் வேகமாக வந்து இருச்சக்கர வாகனத்தின்மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். பேருந்தை வந்தவர்கள் கத்தி கூச்சலிட்டார்கள். நான் பேருந்தை நிறுத்தி விட்டு ஓடிச் சென்று பார்த்தபோது இருச்சக்கர வாகனத்தில் வந்தவர் கை காலில் அடிப்பட்டு கீழே கிடந்தார். அவருக்கு நான் தண்ணீர் கொடுத்து முதலுதவி செய்து ஒரு ஆட்டோ மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் நான் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்து விட்டு பேருந்தை காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றேன். காயம்பட்ட நபர் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்து அங்கிருந்து தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததாகவும், அவர் தஞ்சாவூர் செல்லும் வழியிலேயே இறந்து விட்டதாக கேள்விபட்டேன். அன்றைய தினம் நான் ஓட்டி வந்த பேருந்தின் நடத்துனர் சந்தானராமன் ஆகும். டவேரா காரின் ஓட்டுநரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ஆஜர் எதிரிதான் டவேரா காரை ஓட்டி வந்த ஓட்டுநர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

போலீசார் என்னை 04.10.2024 அன்று மதியம் 3.00 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னை யார் விசாரித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. அதன்பிறகு போலீசார் என்னை ஒருபோதும் விசாரிக்கவில்லை. என்னை போலீசார் விசாரித்தபோது ஆஜர் எதிரிதான் டவேரா காரை ஓட்டி வந்த ஓட்டுநர் என்று சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் கூறியுள்ளேன். போலீசார்

விசாரணையில் ஆஜர் எதிரிதான் டவேரா காரை ஓட்டி வந்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றாலும், தற்போது தான் நீதிமன்றத்தில் முதன் முறையாக மேற்படி விவரத்தை கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பாலத்தின் மையப்பகுதிக்கு முன்பாக இறக்கத்தில் இருந்து ஏறிக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அதேபோல் டவேரா கார் எனக்கு எதிர்புறத்தில் பாலத்தின் மையப்பகுதியிலிருந்து இறக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். சாலையின் கிழக்கு பகுதி என்பது டவேரா காருக்கு இடதுபுற ஓரம் என்றால் சரிதான். இருச்சக்கர வாகனம் வந்ததை எனது பேருந்தின் இருக்கையிலிருந்து பார்க்க முடியாது என்றால் சரியல்ல, பார்க்க முடியும். எனது பேருந்தில் எனது இருக்கைக்கு பின்னால் 5 வது சீட்டு என்பது பேருந்தின் மையப்பகுதி என்றால் சரிதான். அதற்கு பின்னால் 5 இருக்கைகள் தள்ளி தான் பின்சக்கரம் உள்ளது என்று சொன்னால் சரிதான். இருச்சக்கர வாகனத்தில் வந்த இறந்து போன நபரின் மனைவி புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீதும் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் 10 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். பொதுவாக என்னால் விபத்து ஏற்பட்டு விட்டால் உடனடியாக பேருந்தை காவல் நிலையத்தில் நிறுத்தவேண்டும் என்பது விதி என்பதால் அதன் அடிப்படையில் தான் நான் காவல் நிலையத்தில் எனது பேருந்தை நிறுத்தி விட்டேன். பேருந்து விபத்து ஏற்பட்டு இறப்பு ஏற்பட்ட வழக்குகளில் எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தால் எங்கள் மீது நிர்வாகம்

நடவடிக்கை எடுக்கும் என்றால் சரிதான். நான் நிரந்தர பணியாளர் ஆவேன். நான் ஓட்டி வந்த பேருந்தில் விபத்து நடந்த சமயத்தில் எத்தனை பயணிகள் இருந்தார்கள் என்றால் நடத்துனருக்கு தான் தெரியும், எனக்கு தெரியாது. நான் ஓட்டி வந்த பேருந்தின் எந்த பகுதியில் இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர் மோதினார் என்றால் வலது பக்க பக்கவாட்டில் ரியர் பகுதியில் பின்புற சக்கரத்தின் முன்னால் மோதினார். இருச்சக்கர வாகனத்தின் இடது புற ஹேண்டில் பார் பேருந்தில் மோதியது. பொதுவாக மேம்பாலங்களில் இறக்கத்திலிருந்து மேலே ஏறும்போது ஒரு வாகனம் மற்றொரு வாகனத்தை முந்தி செல்ல கூடாது என்பது விதி என்றால் சரிதான். டவேரா காருக்கு முன்னால் ஒரு மினி பேருந்து போய்க்கொண்டிருந்தது. டவேரா காருக்கு பின்னால் என்ன வாகனம் வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு முன்னால் கார் மற்றும் இருச்சக்கர வாகனங்கள் சென்று கொண்டிருந்தது, எத்தனை வாகனங்கள் சென்றது என்று என்னால் குறிப்பிட்டு கூற முடியாது. இந்த விபத்து எதையும் நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் இந்த விபத்து நடைபெறவில்லை என்றாலும், மேற்படி இறந்து போன நபர் தன்னுடைய இருச்சக்கர வாகனத்தை என்னுடைய பேருந்தை முந்துவதற்காக இயக்கியபோது நான் பேருந்தை கவனக்குறைவாக இயக்கியதால் இருச்சக்கர வாகனத்தில் மோதி அதனால் மேற்படி இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் தடுமாறி டவேரா காரின் வலது பின்பகுதியில் விழுந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் தான் அங்குள்ளவர்கள் விபத்தை பார்த்தவர்கள் கூறியபடிதான் இறந்து போனவரின்

மனைவி அ.சா.1 என் மீது காவல் நிலையத்தில் என் பெயரிலும் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், இரண்டு நபர்கள் மீதும் புகார் கொடுத்துள்ளார். நான் சொல்வது போல் நான் பேருந்தை விட்டு இறங்கவும் இல்லை என்றாலும், விபத்தில் இறந்து போன நபரை பார்க்கவில்லை என்றாலும், மேற்படி நபரை ஆட்டோவில் ஏற்றி அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. என் மீது வழக்கு வந்தால் எங்கள் நிர்வாகம் இழப்பீடு கொடுக்க வேண்டி வரும் என்ற காரணத்தினால் எங்கள் நிர்வாக தரப்பினர் காவல் துறையில் சிபாரிசு செய்து அதன்பேரில் முதல் தகவல் அறிக்கையில் இருந்து என் பெயர் எடுக்கப்பட்டு என்னை சாட்சி பட்டியலில் சேர்த்ததால் அதனை அனுசரித்து போலீசார் சொல்லிக் கொடுத்ததின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆஜர் எதிரியை பார்க்கவில்லை என்றாலும், பார்த்ததாக நான் கூறுவது பொய் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by her to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*